**விளம்பரம் எண். 03 / 2020** **நாள் –15.06.2020**

**மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம் விருதுநகர் மாவட்டம்**
**கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகம், சி–1–3 பிளாக் முதல் தளம்,**
**மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகம், குமாரசாமி ராஜா நகர், விருதுநகர்.**

**விருதுநகர் மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் நியாயவிலைக்கடைகளுக்கு விற்பனையாளர் (Sales person) மற்றும் கட்டுனர் (Packer) பதவிக்கு நேரடி நியமனம் செய்வதற்கான விண்ணப்பங்கள் 15.07.2020 பிற்பகல் 05.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன.**

| வ. எண். | நேரடி நியமன பதவி விவரம் | சம்பள விகிதம் | கூட்டுறவு நிறுவனத்தின் பெயர் | காலிப்பணியிட எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | நியாய விலைக்கடை விற்பனையாளர் (Sales Person) | 1).தொகுப்பு ஊதியம் ரூ. 5000/- நியமன நாளிலிருந்து ஓராண்டு வரை 2). ஓராண்டுக்குப் பிறகு ஊதிய விகிதம் ரூ. 4300-12000/- (ஆண்டு ஊதிய உயர்வு 2.5%) | 1. கூட்டுறவு மொத்த விற்பனைபண்டகசாலை. | 11 |
| | | | 2. தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலை. | 11 |
| | | | 3.தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம். | 72 |
| | | | **மொத்தம்** | **94** |

| வ. எண். | நேரடி நியமன பதவி விவரம் | சம்பள விகிதம் | கூட்டுறவு நிறுவனத்தின் பெயர் | காலிப்பணியிட எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 2 | நியாய விலைக்கடை கட்டுனர் (Packer) | 1).தொகுப்பு ஊதியம் ரூ. 4250/- நியமன நாளிலிருந்து ஓராண்டு வரை 2). ஓராண்டுக்குப் பிறகு ஊதிய விகிதம் ரூ.3900/- -11000/- (ஆண்டு ஊதிய உயர்வு 2.5%) | 1. கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை | 10 |
| | | | 2. தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலை. | 1 |
| | | | **மொத்தம்** | 11 |

## 2. நிபந்தனைகள்:-

1. மேற்படி பதவிகளுக்கான நேரடி நியமனத்தின்போது அரசு பணியாளர்கள் தேர்வுக்குப் பின்பற்றப்படும் வகுப்பு வாரி சுழற்சி முறை ஒட்டு மொத்த நியமனத்திற்கும் கீழ்கண்டவாறு பின்பற்றப்படும்.

| பதவி | மொத்த காலிப் பணியிடம் | வகுப்பு வாரி இட ஒதுக்கீடு | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | பொதுப் போட்டி | பிற்படுத்தப் பட்டோர் (இஸ்லாமியர் தவிர) | பிற்படுத்தப் பட்டோர் (இஸ்லாமியர்) | மிகவும் பிற்படுத்தப் பட்டோர் / சீர்மரபினர் | ஆதி திராவிடர் | ஆதி திராவிடர் அருந்ததியர் | பழங்கு டியினர் |
| விற்ப னை யாளர் | 94 | 29 | 24 | 4 | 19 | 14 | 3 | 1 |
| கட்டு நர் | 11 | 3 | 3 | 0 | 3 | 1 | 1 | 0 |

2. காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை மாறுதலுக்கு உட்பட்டது.

3. நியமனத்தின் போது தகுதியான பெண் விண்ணப்பதாரர்கள் போதுமான அளவு இல்லாத போது பெண்களுக்கான ஒதுக்கீடு எண்ணிக்கையைத் தகுதி வாய்ந்த அதே வகுப்பினைச் சார்ந்த ஆண்களைக் கொண்டு நிரப்பப்படும்.

4. ஆதரவற்ற விதவைகள், மாற்றுத் திறனாளிகள் (கண் பார்வையற்றோர் தவிர) மற்றும் முன்னாள் ராணுவத்தினர் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள், இந்த நியமனத்தின் போதும் பின்பற்றப்படும்.

5. நியாயவிலைக்கடை விற்பனையாளர் மற்றும் கட்டுநர் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் தனித்தனியே அதற்குரிய விண்ணப்பங்களில் விண்ணப்பிக்க வேண்டும்.

6. மேற்படி பணியிடங்களுக்கான தேர்வு குறித்து ஏதேனும் முறையீடு செய்வதாயின் இத்தேர்வு முடிவு வெளியிடப்பட்ட 90 நாட்களுக்குள் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தில் மேல் முறையீடு உரிய காரணங்களுடன் செய்யப்பட வேண்டும். அதற்குப் பின் பெறப்படும் முறையீடுகள் ஏற்கப்படமாட்டாது.

7. உடற்தகுதி சான்றிதழ்:-

   மேற்படி பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் அரசு உதவி மருத்துவர் நிலைக்கு குறையாத மருத்துவரிடம் பெற்ற உடற்தகுதிச் சான்றிதழினைச் சமர்ப்பிக்க வேண்டும். தகுதி பெற்ற கண் மருத்துவரிடம் பெறப்பட்ட சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும். மாற்றுத்திறனாளிகள் தங்களுடைய உடல் ஊனம் மேற்படி பதவிகளுக்கான பணியினைச் செய்வதற்கு தடையாக இருக்காது என்பது குறித்து மருத்துவ குழுமத்திடமிருந்து பெறப்பெற்ற சான்றிதழினையும் சமர்ப்பிக்க வேண்டும்.

## 3. தகுதிகள்:-

### அ. வயது (01.01.2020 அன்று)

1. விண்ணப்பதாரர்கள் 18 வயது பூர்த்தி அடைந்தவர்களாக இருக்க வேண்டும். (அதாவது 01.01.2002 அன்றோ அதற்கு முன்னரோ பிறந்தவராக இருக்க வேண்டும்.)

2. விண்ணப்பதாரர்கள் 01.01.2020 அன்று கீழ்க்கண்ட வயதினைப் பூர்த்தி செய்தவராக இருக்கக் கூடாது.

| | | |
|---|---|---|
| i) | ஆதி திராவிடர், ஆதி திராவிட அருந்ததியர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம் தவிர), பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) மற்றும் அனைத்து வகுப்பினைச் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் | **வயது வரம்பு இல்லை** |
| ii) | மேற்படி வகுப்பினைச் சாராத இதர விண்ணப்பதாரர்கள் (OC) | **30 வயது** |

முன்னாள் இராணுவத்தினர், ஆதரவற்ற விதவை மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு அரசாணைப்படி வயது வரம்பு விலக்களிக்கப்படும்

### ஆ. கல்வித் தகுதிகள்:-

1. நியாய விலைக் கடை விற்பனையாளர்-- மேல்நிலை வகுப்பு தேர்ச்சி (+2 தேர்ச்சி)

2. நியாய விலைக் கடை கட்டுனர் (Packer) -- பள்ளி இறுதி வகுப்பு தேர்ச்சி (பத்தாம் வகுப்பு தேர்ச்சி)

## 4. தமிழ் மொழித் திறன்:-

விண்ணப்பதாரர்கள் இந்த அறிவிப்பு வெளியிடும் நாள் அன்று தமிழ் மொழியில் எழுதப் படிக்க போதுமான திறன் உள்ளவராக இருக்க வேண்டும்.

## 5. தெரிவு முறை:-

மேற்படி காலிப் பணியிடங்கள் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் பெறப்படும் பட்டியல் மற்றும் இவ்விளம்பரம் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் அனைத்திற்கும் நேர்முகத் தேர்வின் அடிப்படையில் நிரப்பப்படும். இப்பணியிடங்களுக்கான நபர்கள், நேர்முகத் தேர்வில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில், வகுப்பு வாரி சுழற்சிக்கு உட்பட்டும், காலிப்பணியிடங்களின் எண்ணிக்கைக்கு உட்பட்டும் தேர்ந்தெடுக்கப்படுவர்.

விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்விற்குக் கட்டாயமாக வருகை புரியவேண்டும். நேர்முகத் தேர்விற்கு வருகை புரியாத விண்ணப்பதாரர்கள் மேற்படி பணியிடங்களுக்கு தேர்தெடுக்கப்பட மாட்டார்கள்.

## 6. காலிப் பணியிடங்களுக்கான விருப்பம் தெரிவித்தல்

விண்ணப்பதாரர்கள், தாங்கள் எந்த நிறுவனத்தின் நியாய விலைக் கடைக்கு பணியமர்த்தப்பட வேண்டும் என்பதற்கான விருப்பத்தை நேர்முகத் தேர்வின் போது தெரிவிக்க வேண்டும். விண்ணப்பதாரர்களின் விருப்பத்தின் அடிப்படையில் அவர்களுக்கான பணியிடம் ஒதுக்கப்பட இயலாத நிலை ஏற்பட்டால் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தின் முடிவின்படி அவர்களுக்குப் பணியிடம் ஒதுக்கப்படும். இது தொடர்பாக மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் எடுக்கப்படும் முடிவே இறுதியானது.

## 7. விண்ணப்பங்கள் விநியோகித்தல்:-

மேற்படி நியாயவிலைக் கடை விற்பனையாளர் மற்றும் கட்டுனர் பணி நியமனங்களுக்கான விண்ணப்பப் படிவத்தை கீழ்க்கண்ட அலுவலகங்களின் **18.06.2020** முதல் வேலை நாட்களில், வேலை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| வ.எண் | வட்டாரத்தின் பெயர் | விண்ணப்பம் விநியோகிக்கும் இடம் |
|---|---|---|
| 1 | விருதுநகர் | 1. விருதுநகர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, மதுரை ரோடு (ஸ்டேட் பேங்க் எதிரில்), விருதுநகர். |
| | | 2. விருதுநகர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை, அருப்புக்கோட்டை ரோடு (அல்லம்பட்டி விலக்கு), விருதுநகர். |
| 2 | அருப்புக்கோட்டை | ஆர்.2 புளியம்பட்டி கூட்டுறவு பண்டகசாலை, பட்டாபிராமன் கோவில் தெரு, அருப்புக்கோட்டை. |
| 3 | காரியாபட்டி | ஏ1569 காரியாபட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் (ஸ்டேட் பேங்க் எதிரில்), காரியாபட்டி. |
| 4 | திருச்சுழி | திருச்சுழி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் (வட்டாட்சியர் அலுவலகம் எதிரில்), திருச்சுழி. |
| 5 | நரிக்குடி | விருதுநகர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, நரிக்குடி கிளை (பேருந்து நிலையம் அருகில்), நரிக்குடி. |
| 6 | திருவில்லிபுத்தூர் | திருவில்லிபுத்தூர் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம், ரயில்வே பீடர் ரோடு, திருவில்லிபுத்தூர். |
| 7 | சிவகாசி | க்யு.948 சிவகாசி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கம், 677, ஞானகிரி ரோடு, காரனேசன் காலனி, சிவகாசி. |
| 8 | சாத்தூர் | விருதுநகர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, சாத்தூர் கிளை, சாத்தூர். |
| 9 | வெம்பக்கோட்டை | தாயில்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம், தாயில்பட்டி. |
| 10 | வத்திராயிருப்பு | வத்திராயிருப்பு கூட்டுறவு பண்டகசாலை, அக்ரஹாரம் தெற்கு தெரு, வத்திராயிருப்பு. |
| 11 | இராஜபாளையம் | இராஜபாளையம் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை, 346, பாரதி நகர், பிஏசிஆர் சாலை, இராஜபாளையம். |

## 8. விண்ணப்பப் பதிவுக் கட்டணம்:-

நியாய விலைக்கடை விற்பனையாளர் நியமனத்திற்கான விண்ணப்பப் பதிவுக் கட்டணம் ரூ.150/- மற்றும் நியாய விலைக்கடை கட்டுநர் **(Packer)** நியமனத்திற்கான விண்ணப்பப் பதிவுக்கட்டணம் ரூ.100/-. **ஆதிதிராவிடர், பழங்குடியினர், அனைத்து வகுப்பைச் சார்ந்த மாற்றுத்திறனாளிகள் மற்றும் அனைத்து வகுப்பைச் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் ஆகியோருக்கு விண்ணப்பப் பதிவுக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.** இதர விண்ணப்பதாரர்கள் மேற்படி கட்டணம் விருதுநகர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமையகம் மற்றும் கிளைகள் அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் **மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம், விருதுநகர் மாவட்டம், (District Recruitment Bureau)** பெயரில் வரைவோலையாக விருதுநகரில் மாற்றத்தக்க வகையில் (Payable at Virudhunagar) எடுக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் எண், மற்றும் விண்ணப்பிக்கப்படும் பதவிக்கான பெயர் மற்றும் விண்ணப்பதாரரின் பெயர் ஆகியவை வரைவோலையின் பின்புறம் எழுதப்பட வேண்டும்.

வரைவோலை இணைக்கப்படாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். ஒரு முறை செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டணம் எக்காரணம் கொண்டும், திருப்பி அளிக்கப்பட மாட்டாது.

## 9. விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டிய இணைப்புகள்:-

விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட அனைத்து சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட நகல்களையே இணைத்து அனுப்ப வேண்டும். எக்காரணம் கொண்டும், அசல் சான்றிதழ்களை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பக்கூடாது. சான்றளிக்கப்பட்ட சான்றிதழ்கள், இணைக்கப்படாமல் அனுப்பப்பட்ட விண்ணப்ப படிவங்கள் நிராகரிக்கப்படும்.

## 10. நேர்முகத் தேர்வு:-

நேர்முகத் தேர்வுக்கான அழைப்புக் கடிதம் விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய விண்ணப்பத்தில் குறிப்பிட்ட தபால் முகவரிக்கு அனுப்பப்படும். நேர்முகத் தேர்விற்கு குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய அனைத்து சான்றிதழ்களின் அசல் மற்றும் அவற்றின் நகல் ஒன்றுடன் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். நேர்முகத் தேர்விற்கு குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் வருகை புரியாத விண்ணப்பதாரர்கள் எந்த நிலையிலும், இது தொடர்பாக எந்த உரிமையும், கோர இயலாது.

## 11. தடையில்லா சான்றிதழ்:-

விண்ணப்பதாரர்கள் ஏற்கனவே பணியாற்றுபவர்களாக (நிரந்தரமாகவோ, அல்லது தற்காலிகமாகவோ) இருக்கும் பட்சத்தில், அவர் பணியாற்றும் அலுவலகத்தில் இருந்து தேவையான தடையில்லா சான்றிதழினை நேர்முகத் தேர்வின்போது சமர்ப்பிக்க வேண்டும்.

## 12. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பெறுதல்

**அ).** விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்புவதற்கு முன் கீழ்க்கண்டவற்றை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| **1** | விண்ணப்பப் படிவங்கள் பந்து முனை பேனா (Ball Point Pen) கொண்டு பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். விண்ணப்பதாரரின் கையொப்பத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் விண்ணப்பதாரர் கட்டாயம் கையொப்பம் இட வேண்டும். கையொப்பம் இல்லாமல் பெறப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். |
| **2** | விண்ணப்பப் படிவத்தில் அனைத்து கலங்களும், இந்த விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட விவரங்களின் அடிப்படையில் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். |
| **3** | விண்ணப்பப் படிவத்துடன் பதிவுக்கட்டணத்திற்கான வரைவோலை தவறாமல் இணைக்கப்பட வேண்டும். |
| **4** | விண்ணப்பதாரர் அவரின் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒன்றை விண்ணப்பப்படிவத்தில் ஒட்டுவதுடன் தனி ஒரு புகைப்படத்தினை இணைக்க வேண்டும். மேலும் சுய முகவரியிட்ட ரூபாய் 25.00க்கான தபால் வில்லை ஒட்டிய 24X10 செ.மீ. உறையினையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். |
| **5** | விண்ணப்பத்துடன் இணைத்து வழங்கப்படும் நேர்முகத்தேர்விற்கான அழைப்பாணையை பூர்த்தி செய்து சுய முகவரியிட்ட உறையில் இணைத்து அனுப்ப வேண்டும். |

ஆ). பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் நேரிலோ அல்லது தபால் மூலம் **மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம், கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், விருதுநகர் 626 002–** என்ற முகவரிக்கு **15.07.2020** மாலை **5.45**க்கு முன்னர் கிடைக்கும்படி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இடம் – விருதுநகர்

நாள்–15.06.2020

தலைவர்/இணைப்பதிவாளர்

மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம், விருதுநகர்.